**தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிறுவனத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவனத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் 09 ஆம் பந்தியின் பிரகாரம் காசு மற்றும் | குறுங்கால வைப்பு பணம் நடைமுறைச் சொத்துக்களுக்கு கொண்டுவந்தமை | நியம இலக்கம் 02 இன் ஆலோசனைகளுக் கு இணங்க காசுப் |

| | | | |
|---|---|---|---|
| | காசுக்குச் சமமானவைகளின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய 03 மாதங்களில் முதிர்ச்சியடையும் ரூபா 20,000,000 நிலையான வைப்பு முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | பிழையானது என ஏற்றுக்கொள்வதுடன், அப்பெறுமதி காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் கீழ் மாற்றப்பட்டு உரிய குறைபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 14 ஆம் பந்தியின் பிரகாரம் தொடர்புடைய எதிர்கால நலன்கள் அல்லது சேவைகளின் தேவை நிறுவனம் ஒன்றுக்கு காசு உட்பாய்ச்சலாக வருகின்ற தேவையுடன் சொத்துக்கள் நிலையான சொத்தாக இனங்காணப்பட வேண்டிய போதிலும், 2015 ஒக்டோபர் 20 ஆம் திகதி ரூபா 1,387,500 தொகையில் மதிப்பீடு செய்யப்பட்ட நிறுவனத்திற்குரிய நுவரெலியா மாவட்டத்தின் பொகவந்தலாவையில் அமைந்துள்ள 0.468 ஹெக்டேயர் அளவான பயிற்சி நிலையத்தின் காணியின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2020 நவம்பர் 03 ஆம் திகதி முதல் இந்த பயிற்சி நிலையம் கொவிட் 19 சிகிச்சை நிலையத்திற்காக சுகாதார அமைச்சினால் தற்காலிமாக பெறப்பட்டமை தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பொகவந்தலாவை பயிற்சி நிலையத்தின் காணியின் மதிப்பீட்டு பெறுமதியான ரூபா 1,387,500 தொகை கணக்குகளில் உள்ளடக்கப்பட்டு குறைபாடுகளை சரிசெய்வற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இந்த நிலையத்தை நிறுவனத்திற்கு மீண்டும் கையளிக்கும் அடிப்படையில் கொவிட் தொற்றுநோய் நிலையத்திற்காக வழங்கப்பட்டமை தொடர்பாக 2021 இன் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியம இலக்கம் 07 இன் ஆலோசனைகளுக்கு இணங்க நிலையான சொத்துக்கள் மற்றும் அவற்றின் இருப்பு தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியின் போது கட்டளையிடப்பட்ட பணிகள் மற்றும் நூலக புத்தகங்களை கொள்வனவு செய்வதற்காக 08 காசோலைகள் எழுதி அதில் ரூபா 2,156,200 தொகை நடைமுறை வேலைக் கணக்கிற்கும் ரூபா 828,669 தொகை நூலக புத்தக கணக்கிற்கும் வரவு வைக்கப்பட்டு பொருட்கள் மற்றும் சேவைகள் பெறப்படும் வரை அருகில் வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக நடைமுறை வேலைக் கணக்கு மற்றும் நூலக புத்தக கணக்கின் மீதிகள் அப்பெறுமானத்தினால் அதிகரித்தும் காசேட்டின் மீதி ரூபா 2,984,869 தொகை குறைவாகவும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | திறைசேரி நிதிஏற்பாடுகளை குறித்த நிறுவனம் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் ஏனைய நிறுவனங்களுடன் கடப்பாடுகளை ஏற்படுத்துதல் நிறுவனம் நிதிரீதியான கஷ்டங்களுக்கு உட்படக் கூடிய காரணங்களாக இருந்தமையால் மூலதன செலவினத்திற்காக 2020.12.03 ஆம் திகதி மற்றும் 2020.12.30 ஆம் திகதி கிடைக்கப் பெற்ற நிதிஏற்பாட்டின் அடிப்படையில் கட்டளைகள் விநியோகிக்கப்பட்டிருந்தன. | பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு முன்னர் காசோலைகள் எழுதப்படாதிருத்தல் வேண்டும். |
| (ஆ) | நிறுவனம் நடாத்திச் செல்லப்படுகின்ற அத்துருகிரியவில் அமைந்துள்ள காணியில் 1.9499 ஹெக்டேயர் பகுதியொன்று 2014 ஒக்டோபர் 15 ஆம் திகதிய 1884/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் இராணுவத்திற்கு கையளிப்பதற்காக செலுத்த வேண்டிய இழப்பீட்டு தொகையான ரூபா 152,585,000 தொகை 2018 ஒக்டோபர் 11 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த போதிலும், இழப்பீடு செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டமையினால் கிடைக்க வேண்டியிருந்த ரூபா 42,594,530 தொகையான தாமத வட்டி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த வட்டி தொகை பெறுவனவு தொடர்பாக காணப்பட்ட நிச்சியமற்ற நிலைமையின் காரணமாக பெற வேண்டிய வட்டியாக கணக்கீட்டு பதிவுகளில் உள்ளடக்கப்படாதிருந்தது டன், 2021.01.18 ஆம் திகதி கிடைத்த வட்டித் தொகை 2021 ஆம் ஆண்டின் வட்டி வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டு குறைபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வட்டி பணத்தை சரியாக கணக்குகளில் சீராக்குதல் வேண்டும். |

இதனால் அப்பெறுமதியில் மீளாய்வாண்டின் மிகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| மத்திய பொறியியல் உசாத்துணை சேவை தனியார் கம்பனிக்கு செலுத்த வேண்டிய பணம். | 16,994,328 | 17,831,535 (மீதி உறுதிப்படுத்தல் கடிதம்) | 837,207 | ஒப்பந்தகாரர் ரூபா 17,831,525 தொகையை உறுதிப்படுத்தியிருந்த போதிலும், செலுத்துவதற்காக கடமைப்பட்டுள்ள தொகை ரூபா 16,994,328 மாத்திரமாகும். நிறுத்தி வைத்தல் பணம் ரூபா 9,794,504.25 தொகைக்காக பெறுமதி சேர் வரி பட்யடில் சமர்ப்பிக்கப்படாமையின் அடிப்படையில் வட் பெறுமதி கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற பெறுமதிகள் பதிவேடுகள் மற்றும் பட்டோலைகளுடன் சரியாக இணக்கம் செய்ய வேண்டியிருந்ததுடன் , செலுத்த வேண்டிய வரி பொறுப்புக்கள் சரியாக இனங்காணப்பட்டு கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்.

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 சனவரி 01 ஆம் திகதி முதல் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் பெறுமதி சேர் வரி பதிவு புரள்வு போதியளவில் இல்லாமையின் அடிப்படையில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் செயலிழக்கப்பட்டிருந்த போதிலும், 2019 ஆம் வரையான | 2020.01.01 ஆம் திகதியில் உள்ளவாறு ஆரம்பமாக உள்நாட்டு விலைக் கொள்வனவின் அடிப்படையில் வரி செலவாக மேற்கூறப்பட்ட மிகை மீதியொன்று காண்பிக்கப்பட்டிருந்தது. 2020.01.01 ஆம் திகதி முதல் பெறுமதி சேர் வரி பதிவு | உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

காலத்திற்குரிய உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 19,820,121 ஈடுசெய்யப்பட்ட வரி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், அது அறவிடக்கூடிய மீதியாக இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் சரியான தன்மையும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

இரத்துச் செய்யப்பட்டமையின் அடிப்படையில் நிறுவனத்தினால் வெளித்தரப்பினர்களுக்கு மேற்கொள்ளப்படுகின்ற சேவைகளுக்காக பெறுமதி சேர் வரி பட்டியல் விநியோகிக்கப்படாமையினால் எதிர்காலத்தில் பெறுமதி சேர் வரி ஈடுசெய்யும் இயலுமை காணப்படவில்லை. இது தொடர்பாக உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு கடிதம் மூலம் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 96,815,868 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 105,809,643 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 8,993,775 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் திறைசேரி நிதி ஏற்பாடு ரூபா 28,595,793 இனால் அதிகரித்து செலவினங்கள் ரூபா 25,294,503 இனால் வீழ்ச்சியடைந்திருந்த போதிலும், நிறுவனம் உழைத்த வருமானத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 62,884,073 இனால் அதாவது 58 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

2019 ஆம் ஆண்டில் ரூபா 135,782,603 தொகையான அரசாங்கத்தின் மூலதன மற்றும் மீண்டெழும் மானியங்கள் 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 164,378,397 வரை ரூபா 28,595,794 இனால் அதாவது 21 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும், முன்னைய ஆண்டின் போது ரூபா 108,847,282 தொகையான நிறுவனத்தின் உழைப்பு வருமானம் ரூபா 45,963,210 வரை ரூபா 62,884,072 இனால் அதாவது 58 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையினால் முன்னைய ஆண்டில் ரூபா 244,629,886 தொகையான மொத்த வருமானம் மீளாய்வாண்டின் போது ரூபா 210,341,606 வரை ரூபா 34,288,280 இனால் அதாவது 14 சதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. நிறுவனத்தினால் பேணிச் செல்லப்படுகின்ற விவசாய நடவடிக்கைகள் தொடர்பான பாடநெறி COVID 19 தொற்றுநோய் நிலைமையின் இடையே பொருத்தமான முறையில் நடத்திச் செல்வது தொடர்பில் கவனம் செலுத்தப்படாமை இதற்கு தாக்கமளித்திருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1979 இன் 45 ஆம் இலக்க தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவன சட்டத்தின் 2(ஊ) பிரிவின் கீழ் நிறுவனத்தின் நோக்கமாகக் காண்பிக்கப்படுகின்ற ‘‘ஏனைய சமமான நிறுவனங்களில் தற்போதும் ஏற்பாடுகள் வதிக்கப்படாத பெருந்தோட்ட முகாமைத்துவம் மற்றும் தொழில் தொடர்புகள் போன்ற துறைகளில் ஆராய்ச்சிகளை நடாத்துதல், 4(ஈ) பிரிவின் கீழ் நிறுவனத்தின் அதிகாரத்தின் கீழ் காண்பிக்கப்படுகின்ற ‘‘பெருந்தோட்ட அபிவிருத்தியின் சனல பிரிவுகள் தொடர்பாகவும் ஆராய்ச்சிகளை நடாத்துதல்’’ நிறுவனத்தின் தூரநோக்கத்தின் கீழ் வருகின்ற ‘‘பெருந்தோட்ட முகாமைத்துவம் தொடர்பான ஆராய்ச்சிகளை நடாத்தும் விசேட நிறுவனமாக உருவாக்குதல்’’ என்ற விடயங்களை அடைந்து கொள்வது தொடர்பில் போதியளவான கவனம் செலுத்தப்பட்டமை அவதானிக்கப்படவில்லை. | நிறுவனத்தினால் 2018 ஆம் ஆண்டின் போது பெருந்தோட்ட துறையில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளை வெளிப்படுத்துதல், ஊக்குவித்தல் மற்றும் உதவியளித்தலாக ஆராய்ச்சி மாநா நடாத்தியிருந்ததுடன், 2020 ஆம் ஆண்டின் மாநாடு 2021.02.12 ஆம் திகதி நடாத்தப்பட்டிருந்தது. நிறுவனத்தின் பணிப்பாளர், சுற்றாடல் அதிகார சபை மற்றும் தொடர்புடைய முள்தேங்காய் பயிர் செய்கைகள் நாட்டிற்கு பொருத்தமானதா என்பது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியில், ஆராய்ச்சி சபையின் பங்குபற்றல் இடம்பெற்றிருந்தது. நிறுவனத்தின் டிப்ளோமா பாடநெறிகளில் ‘‘ஆராய்ச்சி திட்ட முறைமை’’ மொடியூலின் கீழ் சகல மாணவர்களும் ஆராய்ச்சி அல்லது ஆய்வொன்றை மேற்கொண்டு அறிக்கை தயாரிக்கப்படுகின்றது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கங்களை சரியான பிரகாரம் நிறைவேற்றுதல் தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இறப்பர், தேயிலை, தெங்கு மற்றும் ஏனைய பயிர் செய்கைககள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் போது 12,855 மாணவர்களின் பங்குபற்றலுடன் 232 சாத்தியவள அபிவிருத்தி | 2019 ஆம் ஆண்டின் போது குண்டு வெடிப்பு சம்பவம் மற்றும் 2020 ஆம் ஆண்டின் போது Covid - 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக | COVID தொற்று நோய் நிலைமையின் இடையே பொருத்தமான முறையில் சாத்திய |

| | | | |
|---|---|---|---|
| | நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்ட போதிலும், 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் கவனத்தில் கொள்ளக்கூடிய குறைவொன்று அவதானிக்கப்பட்டமையினால் முறையே 5,414 மற்றும் 693 மாணவர்களின் பங்களிப்புடன் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் எண்ணிக்கை 106 மற்றும் 12 ஆனமையால் அதாவது, 45.6 சதவீதம் மற்றும் 5.1 சதவீதம் மாத்திரமாக இருந்தது. | பிரதேச மட்டத்தில் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு இருந்த இயலுமை மிகவும் வரையறுக்கப்பட்டிருந்தது. நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கையும் குறைவடைந்திருந்தது. | வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்திச் செல்வது தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (ஆ) | நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட பொருந்தோட்ட முகாமைத்துவம் தொடர்பான தேசிய டிப்லோமா பாடநெறி, பொருந்தோட்ட முகாமைத்துவம் மற்றும் புத்தகங்களை பேணும் சான்றுதழ் பத்திர பாடநெறி என்பவற்றை உள்ளடக்கிய 06 பாடநெறிகளில் முடிவடைந்த அண்ணளவாக 02 பாடநெறிகளுக்காக 259 மாணவர்கள் பதிவு செய்திருந்ததுடன், அவர்களில் 103 மாணவர்கள் அதாவது 40 சதவீதமானோர் பாடநெறியை கைவிட்டு சென்றிருந்தனர். எனினும், அதற்கான காரணங்கள் தொடர்பாக கண்டறிந்து அந்த பாடநெறிகளின் தரத்தை அபிவிருத்தி செய்து பயனுள்ளதாக நடாத்திச் செல்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | பெருந்தோட்ட முகாமைத்துவம் தொடர்பான தேசிய டிப்ளோமா பாடநெறியை விட்டுச்சென்ற 5 ஆம் கற்கை ஆண்டு மாணவர்கள் தற்போது பாடநெறிகளை தொடர்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. பெருந்தோட்ட முகாமைத்துவம் மற்றும் புத்தகங்களைப் பேணும் சான்றிதழ்பத்திர பாடநெறியில் பங்குபற்றிய போதும் ஒரு மொடியூலுக்கு மாத்திரம் பங்குபற்றியிருக்காதவர்கள் ஆகும். தேயிலை தொழிற்சாலை உதவியாளர் மற்றும் தேயிலைத்துறை உதவியாளர் பாடநெறிகளில் 06 மாணவர்கள் ஒரு மாத தொழில் பயிற்சியை பூர்த்தி செய்யாதிருந்ததுடன் மனித வள முகாமைத்துவ அடிப்படை பாடநெறி மற்றும் சான்றிதழ்பத்திர பாட நெறிகள் அல்லாமல் கடமைரீதியான கஷ்டத்தின் அடிப்படையில் பாடநெறியை கைவிட்டு சென்றிருந்தனர். | பாடநெறியை வெற்றிகரமான பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்த விடயங்களை இனங்கண்டு அதற்கான சரியான தீர்வுகள் வழங்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) நிறுவனத்தினால் மீளாய்வாண்டின் போது 157 மாணவர்களின் பங்களிப்புடன் கல்விசார் மற்றும் தொழில்சார் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் 08 இனை நடத்துவதற்கு திட்டமிடப்பட்ட போதும் 47 மாணவர்களின் பங்குபற்றலுடன் 02 நிகழ்ச்சித் திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன், கடந்த 04 வருடங்களின் நிலைமையை கவனத்தில் கொள்ளும் போது 760 மாணவர்களின் பங்குபற்றலுடன் 50 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டு 609 மாணவர்களின் பங்களிப்புடன் 38 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தது. மேலும், 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது 74 பேர்களின் பங்குபற்றலுடன் 05 திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டு 38 மாணவர்களின் பங்களிப்புடன் 03 நிகழ்ச்சித் திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. காலரீதியான தேவையின் அடிப்படையில் இந்த பாடநெறிகளின் விடயங்களின் பரிந்துரைகள் திருத்தப்பட்டு தேவையான வசதிகள் அபிவிருத்தி செய்யப்படாமை இந்த நிலைமைக்கு காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றுபவர்களில் ஏதாவது குறைவொன்று ஏற்பட்டமைக்கும், பிரயோக பாட அமர்வுகளை உள்ளடக்கிய இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்காகவும் உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு சம்பவம் மற்றும் 2020 ஆம் ஆண்டில் COVID 19 தொற்று நிலைமை என்பன காரணமாக இருந்தது. | COVID தொற்று நோய் நிலைமையின் இடையே பொருத்தமான முறையில் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தின் 71 ஆன அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்களுக்குப் பயிற்சி அளிக்கும் விஷேட நிபுணத்துவம் (பெருந்தோட்ட முகாமைத்துவம்), உதவி | இந்த 07 பதவிகளுக்காக திருத்தப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சேவைகள் | ஆட்சேர்ப்பு நடைமுறையை அங்கீகரித்துக் கொள்வதற்கும், பிரமானங்களுக்கு |

| | | |
|---|---|---|
| பணிப்பாளர் (சந்தைப்படுத்தல், வியாபார மேம்படுத்தல் மற்றும் திட்டமிடல்), பயிற்சி உத்தியோகத்தர் (பெருந்தோட்ட பொறியியலாளர்) உள்ளடக்கிய 16 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டமை நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டதால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பில் தாக்கமளித்தருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் 06 பதவிப்பெயர்களின் கீழ் 08 பதவிகள் அங்கீகரிக்கப்பட்ட போதும் அதற்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறையை அங்கீகரித்து கொள்ளப்படாமையால் ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது வரையில் விநியோகிக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையின் காரணமாக சகல ஆட்சேர்ப்புக்களும் நிறுத்தப்பட்டுள்ளது. | இணங்க வெற்றிடங்களை நிரப்புவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாலுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 06 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1. மற்றும் 6.5.3. ஆம் பந்திகளின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களுடன் வரைவு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்கள் 42 நாட்கள் தாமதிக்கப்பட்டு 2021 ஏப்ரல் 12 ஆம் திகதியே வழங்கப்பட்டிருந்ததுடன், வரைவு ஆண்டறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கொவிட் தொற்றுநோய் நிலைமையில் அவ்வப்போது நாடு மூடப்பட்டமை மற்றும் நிர்வாக சபைக் கூட்டங்களை நடத்துவதில் பிரச்சினைகள் தோன்றியிருந்தமை, சிலர் கொவிட் நோய்க்கு உட்பட்டமையின் காரணமாக நிறுவனம் பல சந்தர்ப்பங்களின் போது மூடவேண்டி ஏற்பட்டமையின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஆண்றிக்கை சமர்ப்பிப்பதில் தாமதம் எற்பட்டிருந்தது. | ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களுடன் வரைவு ஆண்றிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 4.2 ஆண்றிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2019 ஆம் ஆண்டின் ஆண்றிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு பகிரங்கப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 இன் ஆண்டின் ஆண்டறிக்கை அமைச்சரவை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குறித்த காலப்பகுதியில் ஆண்றிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |